padippakam



# காக்கை வன்னியன் முதல் கதிர்காமர் வரை

## பகுதி II

33

1963ல் நாட்டில் ஏற்பட்ட கடுமையான பொருளாதார நெருக்கடி காரணமாகவும், திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவின் மெத்தனப் போக்கால் மக்கள் மத்தியில் ஏற்பட்ட அதிருப்தி காரணமாகவும், இடது சாரிக்கட்சிகள் மத்தியில் என்றுமில்லாத அளவுக்கு 'ஒற்றுமை' ஏற்பட்டது.

இடதுசாரிகள் தங்களுக்குள் ஒற்றுமைப்பட்டது மட்டுமல்லாமல், தொழிலாளர் இயக்கங்களையும் ஒரு பொது வேலைத் திட்டத்தின்கீழ் ஒன்றிணைப்பதில் 'வெற்றி' கண்டனர்.

னிஸ்ட் கட்சியின் சார்பில் நா. சண்முகநாதனும், லங்கா சமசமாஜக்கட்சியின் சார்பில் பிரின்ஸ் இராஜசூரியாவும் இணைச் செயலாளர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

அதன்பின் 1963 மேதின ஊர்வலம் வரலாற்றில் அதற்கு முன்பும், அதற்குப் பின்பும் அப்படி ஒரு எழுச்சிமிக்க, மக்கள் வெள்ளமென அணிதிரண்ட ஊர்வலம் நடைபெற்றதில்லை என்று குறிப்பிடும் அளவுக்கு பிரமாண்டமானதாக இருந்தது. இந்த ஊர்வலத்தில் கலந்து கொள்வதற்கென்று இலங்கையில் தொலைதூரக் கிராமங்கள்- நகரங்களிலிருந்தும் தொழிலாளர்கள் பல்லாயிரக்கணக்கில் கொழும்புக்கு வந்திருந்தார்கள்.

இந்த மேதின ஊர்வலத்தோடு ஒப்பிட்டு பார்த்தபோது சிறிலங்கா சுதந்திரக் கட்சியும்,

> நடைபெற்ற 1963 மேதின ஊர்வலம் வரலாற்றில் அதற்கு முன்பும், அதற்குப் பின்பும் அப்படி ஒரு எழுச்சிமிக்க, மக்கள் வெள்ளமென அணிதிரண்ட ஊர்வலம் நடைபெற்றதில்லை என்று குறிப்பிடும் அளவுக்கு பிரமாண்டமானதாக இருந்தது.

கரவாத அணியைச் சேர்ந்த கட்சி என்று காலனிய மற்றும் ஏகாதிபத்தியவாதிகள் முத்திரை குத்தியிருந்தனர். கம்யூனிச அணியைச் சேர்ந்த நாடுகள்- காலனியத்துக்கு எதிரான- ஏகாதிபத்தியத்துக்கெதிரான, இனவா

இரத்துச் செய்து விட்டு அலரி மாளிகையில் தங்கியிருந்து அடுத்து என்ன செய்யலாம்' என்பது பற்றி தனது அரசியல் ஆலோசகர்களுடன் கலந்துரையாடினார்.

மக்கள் இடதுசாரிகளின் பக்கம் இருப்பதால், இடதுசாரிகளுக்கு எதிராக அடக்குமுறையைப் பிரயோகிப்பது அபாயகரமானதென்றும், அவ்வாறு செய்தால் மக்களின் கோபம் இன்னும் அதிகரிக்கும் என்றும், அதனால் தந்திரோபாய அடிப்படையிலேயே இந்தவிடயத்தை

வர்களின் கீழ்ப்பணிவை 'ஒரு அடியில்' அவர் பெற்றுக்கொண்டார். அவரிலும் பார்க்கத் திறமைபடைத்த அவரது கணவனுக்கு லெப்டினன்டுகளாக (உபதலைவர்களாக) இருக்க மறுத்த பேர்வழிகள் தற்போது அவரது காலடியில் சாஷ்டாங்கமாக வீழ்ந்து கிடந்தார்கள். தொழிலாளி வர்க்கமும், இடதுசாரி இயக்கமும் படுமோசமாகக் காட்டிக் கொடுக்கப்பட்டன. என்.எம். பெரேராவும், அவரது கட்சியின் இரண்டு சகாக்களும் அமைச்சர் பதவிகளைப் பெற்றார்கள்.

(மார்க்சியப் பார்வையில் இலங்கைச் சரித்திரம் பக் - 91-92)

பிலிப் குணவர்த்தனா மந்திரி சபையில் சேர்ந்து கொள்ளவில்லை. அதற்குக் காரணம், தான் அமைச்சரவையில் சேர்வதானால், அதில் அங்கம் வகிக்கும் சி.பி.டி. சில்வா வெளியேற்றப்பட வேண்டும் என்று அவர் கோரிக்கை வைத்ததேயாகும்.

இது ஒரு வேடிக்கையான கோரிக்கையாகும். முன்பு பண்டாரநாயக்காவின் மந்திரி சபையில் அவருடன் சேர்ந்து மந்தி

## தொழிற்சங்கங்களின் ஒற்றுமையும்- சிங்கள இடதுசாரிகளின் துரோகத்தனமும்

சம்பள உயர்வு, ஆண் பெண் சமவேலைக்கு சம சம்பளம், சம்பளத்துடன் கூடிய விடுமுறை நாட்கள் பற்றிய வரையறை, வேலையற்றோருக்கு வேலை அல்லது காப்புறுதி, தனியார் துறை ஊழியர்களுக்கான வரையறை மற்றும் சலுகைகள், பொதுச் சேவை ஊழியர்களது அரசியல் உரிமை உட்பட 21 பொதுக் கோரிக்கைகளை முன்வைத்து ஐக்கிய தொழிற்சங்கக் கூட்டமைப்பு ஒன்று உருவாக்கப்பட்டது.

இந்த அமைப்பில் இடதுசாரித் தொழிற்சங்கங்களுடன் தொண்டைமான் தலைமையிலான இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், அசீஸ் தலைமையிலான ஜனநாயகத் தொழிலாளர் காங்கிரஸ், அரசாங்க எழுதுவினைஞர்கள் சங்கம், தனியார் துறை ஊழியர்கள் சங்கம், ஆசிரியர்கள் சங்கம், தொழில்நுட்ப



வியலாளர் சங்கம் என்று அனைத்துத் தரப்பினரும் இணைந்துகொண்டனர்.

1963-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் இந்த ஐக்கிய தொழிற்சங்கப் கூட்டமைப்பின் முதலாவது மாநாடு நடைபெற்றது. இம்மாநாட்டில் இந்த அமைப்பின் ஒற்றுமையை வளர்த்தெடுப்பதற்கும், அரசுக்கு எதிரான தொழிற்சங்க மற்றும் அரசியல் போராட்டங்களை முன்னெடுப்பதற்கும் இலங்கைக் கம்யூ

ஐக்கிய தேசியக் கட்சியும் நடாத்திய ஊர்வலங்கள் யானையையும், பூனையையும் போலத் தெரிந்தன.

இடதுசாரிகளின் மாபெரும் எழுச்சியையும், தொழிலாளர்களின் ஐக்கியத்தையும் பார்த்து முன்னனுபவம் அற்ற நிலையில் அரசியலுக்கு வந்த சிறீமாவோ பண்டாரநாயக்கா பயந்து போய்விட்டார்.

பௌத்த சிங்கள தேசியவாதிகளை திருப்திப்படுத்துவதற்காக மிஷனறிமார், மற்றும் தனியார் துறையினர் வசமிருந்த அனைத்துப் பாடசாலைகளையும் அரச உடமையாக்கியது, இலங்கை வங்கியையும் காப்புறுதிக் கம்பனியையும் அரச உடமையாக்கியது, அமெரிக்க நிறுவனங்களுக்குச் சொந்தமாக இருந்த இராட்சத எண்ணெய்க் கம்பனிகளை அரச உடமையாக்கியது ஆகிய நடவடிக்கைகளால் சர்வதேச அளவில் 'ஏகாதிபத்தியவாதிகளினதும்', உள்நாட்டில் 'தரகு முதலாளித்துவ வர்க்கத்தினதும்' பாரிய அதிருப்திக்கு அவர் முகங்கொடுக்க வேண்டியிருந்தது.

அவரது கணவர் S.W.R.D. பண்டாரநாயக்கா ஆட்சியிலிருந்த காலத்திலிருந்தே இலங்கையிலிருந்த காலனிய, ஏகாதிபத்திய வேர்களை அறுப்பதில் சிறிலங்கா சுதந்திரக்கட்சி முன்னின்று செயற்பட்டதால் அக்கட்சியை கம்யூனிசப் பயங்

> இடதுசாரி ஐக்கிய முன்னணி முடிந்துவிட்டது. சில மாதங்களுக்கு முன் அதை உருவாக்கிய, அதே ஆட்கள் அதனை அழித்தொழித்து விட்டார்கள். இது திருமதி பண்டாரநாயக்காவின் திறமையான நடவடிக்கையாகும்.

தமற்ற, உழைக்கும் மக்களின் நலன்களைப் பேணுகின்ற முற்போக்கான கட்சி என்று பாராட்டுச் சான்றிதழ் வழங்கியிருந்தன. சிறிலங்கா சுதந்திரக் கட்சியினுடைய அனைத்து நடவடிக்கைகளுமே குறுகிய இனவாதத்தை அதாவது கண்டிய 'கொயிகம சாதியப் பிரபுக்களின்' நலன்களை, பிரதிபலிக்கின்ற ஒன்றாகவும், காலனிய மற்றும் ஏகாதிபத்திய வேர்களை அப்புறப்படுத்திவிட்டு அவற்றின் இடத்தில் பௌத்த சிங்கள பெருந்தேசியவாதத்தை பிரதியீடு செய்யும் ஒன்றாகவுமே அமைந்திருந்தன.

1964-ம் ஆண்டு மார்ச் மாதம் 21-ம் திகதி ஐக்கிய தொழிற்சங்கக் கூட்டுக் கமிட்டி தங்களது 21 அம்சக் கோரிக்கைகளை வலியுறுத்தி மற்றொரு பிரமாண்டமான கூட்டத்தை கொழும்பு காலிமுகத்திடலில் நடத்தினர்.

அந்தக் கூட்டத்தில் கலந்துகொண்ட மக்களின் தொகையையும், அவர்களிடம் காணப்பட்ட எழுச்சியையும் இரகசியப் பொலிசாருடைய தகவல்கள் மூலம் அறிந்து கொண்ட திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா, 'தான் அன்று கொழும்புக்கு வெளியே பேச வேண்டியிருந்த கூட்டத்துக்கு செல்வதை

கையாளவேண்டும் என்றும் அவருக்கு ஆலோசனை கூறப்பட்டது.

அதன்பின் அரசாங்கம் என்ன செய்தது என்பது பற்றி ஐக்கிய தொழிற்சங்க கூட்டமைப்பின் இணைச் செயலாளர்களில் ஒருவரான நா. சண்முகதாசன் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

'அவர் (திருமதி ஸ்ரீமாவோ



பண்டாரநாயக்கா) எதிரியின் கோட்டையை உள்ளிருந்து கைப்பற்றும் புகழ்பெற்ற தந்திரத்தை பாவிக்கத் தீர்மானித்தார். லங்கா சமசமாஜக்கட்சித் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தும் 'விருப்பத்தை' அவர் தெரிவித்தார். திருமதி பண்டாரநாயக்கா நீட்டிய விரலை மடிப்பதற்குமுன் என். எம்.பெரேராவும், பிலிப் குணவர்த்தனாவும் வேறுவேறு கதவுகளால் முண்டியடித்துக்கொண்டு அலரி மாளிகைக்குள் சென்றார்கள். பாவம் பீட்டர் கெனமன் அனுமதிக்காகக் கெஞ்சி மன்றாடிக்கொண்டு வாசலிலேயே நின்றார். இடதுசாரி ஐக்கிய முன்னணி முடிந்துவிட்டது. சில மாதங்களுக்கு முன் அதை உருவாக்கிய, அதே ஆட்கள் அதனை அழித்தொழித்து விட்டார்கள். இது திருமதி பண்டாரநாயக்காவின் திறமையான நடவடிக்கையாகும்.

அவருடைய கணவருக்குத் தப்பி நழுவிய இடதுசாரித் தலைரியாக இருந்த பிலிப் குணவர்த்தனா ஸ்ரீமாவோவின் மந்திரி சபையில் மட்டும் சேர முடியாதென்று கூறியது கேலிக் கூத்தாக இருந்தது.

ஸ்ரீமாவோ அரசாங்கத்தில் நிதி அமைச்சராகப் பதவியேற்றுக்கொண்ட 'தங்க மூளைக்காரரான' இரட்டைக் கலாநிதி என். எம். பெரேரா அரசாங்கத்திற்கு எதிராக வெளியில் இருந்த காலத்தில், தானும் சேர்ந்து உருவாக்கிய 21 அம்சக் கோரிக்கைகளை ஏற்க மறுத்தது மட்டுமன்றி அதற்கெதிராக செயற்பட்டதும், அவரது அப்பட்டமான சந்தர்ப்பவாதத்திற்கும், துரோகத் தனத்துக்கும் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா தனது (முதலாவது) ஆட்சியின் இறுதிக்காலத்தில் இந்தியாவுக்குச் சென்று, அப்போது இந்தியாவின் பிரதமராக இருந்த லால்பகதூர் சாஸ்திரியுடன், வரலாற்றும் புகழ்மிக்க ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொண்டார். மலையக தோட்டத் தொழிலாளர்களுக்கு மிகப் பெரிய அநீதியை இழைத்த இந்த ஒப்பந்தம், சர்வதேச அளவிலும் பலத்த கண்டனத்துக் குள்ளாகியது.

**- நக்கீரன்**

படிப்பகம்